This question paper contains 4+2 printed pages]

*Your Roll No.................*

**2651**

**B.A. (PROGRAMME)/I** **D-II**

TAMIL LANGUAGE (B) —Paper I

*Time : 3 Hours* *Maximum Marks :* 100

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

1. ஏதேனும் ஒரு தலைப்பில் சிறு கட்டுரை (150 சொற்கள்) வரைக. 20

(அ) குழந்தைத் திருமணம்.

(ஆ) வனம் பாதுகாப்பு.

(இ) உடற் கல்லியின் அவசியம்.

2. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடை தருக. 20

உலகப் புகழ் பெற்ற பாண்டிய நாட்டு துறைமுகப்பட்டினம் கொற்கையாகும்.

P.T.O.

இத்துறைமுகம் ஒரு வளைகுடாவில் இருந்ததனால் முத்துக் குளிக்கும் இடமாகவும் சங்கு எடுக்கும் இடமாகவும் விளங்கியது. கொற்கையில் கிடைத்த முத்துகள் உலகப் புகழ் பெற்றவையாகும். சங்கப் புலவர்களும் இங்குக்கிடைத்த முத்துகளின் பெருமையைப் புகழ்ந்துள்ளனர். கொற்கை, பாண்டிய இளவரசர்களுடைய இருக்கையாகவும் திகழ்ந்தது. யவனர்கள் ‘கொல்கொய்’ என்று வழங்கிய துறைமுகம் கொற்கையேயாகும். கடல் கொண்டகாபாடபுரம் கொற்கையாக இருக்கலாம் எனச் சில அறிஞர்கள் கருதுவர்.

பாண்டிய நாட்டின் தென் கோடியில் கன்னியாகுமரிக்கு அருகில் குமரித் துறைமுகம் இருந்தது. இது துறைமுக மாகவும் புனித நீராடும் இடமாகவும் கருதப்படுகிறது. தமிழ் நாட்டவரும் மற்றையோரும் இங்குப்புனித நீராடுவதுண்டு. குமரித் துறைமுத்துக் கருகில் குமரி என்னும் ஊரும் அங்கு ஒரு கப்பல் அமைக்கும் தொழிற்சாலையும் இருந்த தென்று யவனர்களுடைய குறிப்புகளிலிருந்து அறிகிறோம். பாண்டிய நாட்டின் மேற்குக் கடற்கரையின் ஆய்நாட்டில் விழிஞம் என்னும்

P.T.O.

துறைமுகப்பட்டினம் இருந்தது. ஆய்நாட்டுக் குறுநில மன்னர்கள், பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆவர். ஆய்நாட்டில் எலங்கோன் என்னும் துறைமுகம் இருந்த தென்று தாலமி என்னும் ஆசிரியர் கூறியுள்ளது விழிஞம் துறைமுகமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

(அ) கொற்கை எங்கு அமைந்திருந்தது? அது எதற்குப் பெயர் பெற்று விளங்கியது?

(ஆ) குமரித் துறை முகம் குறித்து யவனர்கள் குறிப்புகளால் அறியப்படுவன யாவை?

(இ) விழிஞம் துறைமுகம் இருந்த நாடு எது?

(ஈ) விழிஞும் குறித்து தாலமியின் கருத்து யாது?

(உ) மேர்கண்ட பத்திக்குப் பொருத்தமானத் தலைப்பு தருவதோடு அப்பத்தியில் வெளிப்படும் மையக் கருத்தைச் சுருக்கி எழுதுக.

3 பிழை திருத்தி எழுதுக. 10

(அ) மழையில் மலை பெய்தது.

(ஆ) குழத்தில் தாமறை பூத்தது.

(இ) ஈட்டியால் வெட்டினான்.

(ஈ) தம்பி நேற்று வருவான்.

(உ) ஆருவது சிணம்.

4 பல பொருள் ஒரு சொல் என்றால் என்ன? சான்றுகள் தந்து விளக்குக. 10

**அல்லது**

ஒரு பொருள் குறித்த பல சொற்கள் மொழியில் பெறும் இடத்தினை சான்றுகளுடன் விளக்குக.

5 ஜீ. முருகனின் 'மாயக்கிளிகள்' என்னும் சிறுகதையை மதிப்பிடுக. 20

**அல்லது**

'பள்ளத்தெரு' என்னும் சிறுகதையில் சாதிய முரண்பாடுகளை விளக்குக.

6 'வேட்கை' (அல்லது) 'வீடு' சிறுகதையில் வரும் பாத்திரங்களை மதிப்பிடுக. 20